(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
STC. NO.243/2021

**Depostitions of PW- 1 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. சின்னச்சோலை | Caste | |
| Father's name | பாலு | Calling | ட்ரைவர் |
| Village | பரளச்சி | Religion | |
| Taluk | அருப்புக்கோட்டை | Age. | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of June-2024

Signature of Witness.

06.06.2024

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை–**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ட்ரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 19.11.2020 ம் தேதி மாலை 04.15 மணியளவில் வன்னியம்பட்டி விலக்கு காவல் நிலைய கார் ஷோரூம்க்கு அருகே இடது புறத்தில் திருவில்லிபுத்தூரில் இருந்து கோயம்புத்தூர் செல்லும் பேருந்தை இயக்கினேன் அப்போது எதிரே லாரி ஒன்று வேகமாக ஒரு காரையும், டாடா ஏசிஇ வாகனத்தையும் ஓவர்டேக் செய்து எனக்கு எதிரே வந்ததால் பேருந்தை இடதுபுறமாக பாலத்தின் அருகே நிறுத்தினேன்.

2. எதிரே வந்த லாரி பேருந்தின் வலது புறத்தில் மோதி பேருந்தின் வலது பக்கம் முழுவதும் சேதமடைந்து விபத்து ஏற்பட்டது. எனக்கு வலது கையிலும், வயிற்றிலும் லேசான காயம் ஏற்பட்டது. லாரி, பேருந்தில் மோதியதில் ஒரு சிலருக்கு லேசான காயம் ஏற்பட்டது. பெரிய அளவில் காயம் இல்லை. லாரியின் ட்ரைவரான ஆஜர் எதிரி லாரியில் சிக்கி கால் முறிவு ஏற்பட்டது. லாரியின் முன்புறம் முழுவதும் சேதம் அடைந்தது. நான் திருவில்லிபுத்தூர் அரசு

மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகாரை வன்னியம்பட்டி காவல் நிலையத்தில் கொடுத்தேன். (**புகார் மனு அ.சா. ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

**3.** புகாரை எனது பேருந்தின் நடத்துனர் எழுதினார், நான் கையெழுத்து மட்டும் செய்தேன். சம்பவம் நடந்த இடம் வன்னியம்பட்டி காவல் நிலையத்திற்கு முன்பு 500 அடி தூரத்தில் நடந்தது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்து பார்த்தால் சம்பவம் தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடனேயே சம்பவஇடத்திற்கு போலீசார் வந்தனர் என்றால் சரிதான். சம்பவத்தை விசாரித்து விட்டு என்னை மருத்துவமனைக்கு போலீசார் அனுப்பிவைத்தனர். நான் பேசும் நிலையிலும், எதிரி பேசமுடியாத நிலையிலும் இருந்தார் என்றால் சரியல்ல. எதிரி பேசும் நிலையிலும், எழுந்துநிற்க முடியாத நிலையிலும் இருந்தார்.

2. எதிரிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு முகச்சிதைவு அடைந்து மயக்க நிலையில் பேசமுடியாத நிலையில் இருந்துவந்தார் என்றும், பேசும் நிலையில் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி நான் சொன்ன விவரங்களை போலீசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு எதிரியை நான் பார்த்ததில்லை என்றும், எதிரியின் பெயர், முகவரி விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. நான் மருத்துவமனை சென்று காவல் நிலையம் வந்தபோது எதிரியின் பெயர், முகவரி விவரங்களை போலீசார் சொல்லி புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரை நான் சொல்லச்சொல்ல நடத்துனர் எழுதினார். புகாரில் லாரி, கார், டாடா ஏசிஇ வாகனத்தை ஓவர் டேக் செய்து வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். பேருந்தில் பயணம் செய்த சில நபர்களுக்கு காயம் ஏற்பட்டதாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் வாகனம் Ariticulated vehicle என்றால் சரிதான்.

4.எதிரியின் வாகனத்தில் 50 டன் எடையுள்ள மரத்தடிகள் ஏற்றப்பட்டிருந்தது என்றால் சரிதான். எதிரி வாகனத்தின் நீளம் 5 அடி இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் நேரான சாலை என்றும், சம்பவ இடத்திற்கு முன்பாக வளைவான சாலை உள்ளது என்றால் சரிதான். எதிரியின் வாகனம் ஓவர் டேக் செய்து வருவதை 150 அடி தூரத்திற்கு முன்பே பார்த்துவிட்டேன். சம்பவ இடத்தின் வழியாக இரண்டு வாகனங்கள் ஒரே நேரத்தில் செல்ல இயலும் என்றால் சரிதான்.

5. எனது பேருந்தில் சுமார் 20 பயணிகள் இருந்தனர். எதிரியின் வாகனத்திற்கு முன்பு பயிற்சி வாகனமும், ஒன்று மிதமான வேகத்தில் சென்று கொண்டிருந்தது என்றால் சரிதான். பயிற்சி வாகனத்திற்கு முன்பு டாடா ஏசிஇ வாகனம் சென்று கொண்டிருந்து என்றால் சரிதான். டாடா ஏசிஇ, பயிற்சி வாகனம் திடீரென பிரேக் போட்டு நின்றதால் லாரியும் பிரேக் போடவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி உண்மை விவரம் எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக ஞாபகம் இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. டாடா ஏசிஇ, பயிற்சி வாகனம் ஆகியவற்றை விலகி வலது புறமாக ஏறி லாரி வந்தது. லோடு லாரி சாலையில் ஓரத்தில் நிறுத்தாமல் எதிரே வந்தால் அதற்கு வழி கொடுப்பது இயற்கை நியதி என்றால் சரிதான். எதிரி வாகனம் சரியான திசையில் வந்து கொண்டிருந்தது என்றும், எனது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி வாகனம் வருவதை பார்த்து பேருந்தை சாலையின் இடது புறமாக நிறுத்தியதாக புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

7. எனது பேருந்து வலது பக்க பம்பர், ஹெட்லைட், முன்பக்க காற்று தடுப்பு தடை கண்ணாடி சேதமடைந்திருந்தது என்றால் சரிதான். எதிரி வாகனத்தில் வலது பக்க பம்பர், ஹெட்லைட், முன்பக்க காற்று தடுப்பு தடை கண்ணாடி சேதமடைந்திருந்தது என்றால் சரியல்ல. எனக்கு லேசான காயம் ஏற்பட்டது

என்றால் சரிதான். எதிரிக்கு தலையிலும், முகத்திலும் காயம் ஏற்பட்டிருந்ததா என்று எனக்கு தெரியாது. எனக்கு சிறுகாயமும், எதிரிக்கு கொடுங்காயமும் ஏற்பட்டது என்றால் சரிதான்.

8. எதிரி ஒரு ஆம்புலன்சிலும், நான் வேறு ஆம்புலன்சிலும் மருத்துவமனைக்கு சென்றோம். எதிரியின் வாகனம் சரியான பாதையில் வந்து கொண்டிருந்ததுஎன்றும், நான் ஓட்டிச்சென்ற பேருந்தை வழிவிட்டு இறக்காமல், எதிரி வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி'னேன் என்றும், நான் அரசு பணியளார் என்பதால் எதிரி மீது பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. லாரியில் இருந்த மரத்தடிகள் சரியாமல் இருந்தது என்றால் சரிதான்.

9. நான் பேருந்தை இடது புறமாக இறக்கி இயக்கியிருந்தால் விபத்தை தவிர்திருக்கலாம் என்றும், எனது கவனக்குறைவும், அஜாக்கிரதையும் விபத்திற்கு காரணம் என்று சொன்னால் சரியல்ல. என் மீது ஒரு விபத்து வழக்கு உள்ளது. நான் கவனக்குறைவாக பேருந்தை இயக்கியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், இந்த வழக்கு பொய்யாக ஜோடிக்கப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.